இந்த மொழிபெயர்க்கப்பட்ட திட்டத் தரவுத் தாள் (PDS) 22 ஏப்பிரல் 2016 திகதியிடப்பட்ட அதன் ஆங்கிலப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

ADB ASIAN DEVELOPMENT BANK

## இலங்கை: காற்றாலை மின் உற்பத்தித் திட்டம்

| | |
|---|---|
| திட்டத்தின் பெயர் | காற்றாலை மின் உற்பத்தித் திட்டம் |
| திட்ட இலக்கம் | 49345-001 |
| நாடு | இலங்கை |
| திட்டத்தின் நிலை | ஒப்புதலளிக்கப்பட்டது |
| திட்ட வகை/ உதவி நடைமுறை | தொழில்நுட்ப உதவி |
| நிதியிடல் மூலம்/ தொகை | **TA 9085-SRI: காற்றாலை மின் உற்பத்தித் திட்டம்**<br>தூய எரிசக்தி நிதி – பல் நிதியாளர்: அமெரிக்க டொலர் $2.00 மில்லியன் |
| மூலோபாய செயற்பட்டியல் | சூழலியல்சார்ந்த நிலையான வளர்ச்சி<br>உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி |
| மாற்றத்திற்கான இயக்கிகள் | ஆளுகை மற்றும் திறன் மேம்பாடு<br>அறிவுசார் தீர்வுகள்<br>கூட்டாண்மைகள்<br>தனியர்த்துறை அபிவிருத்தி |
| துறை / உபதுறை | **எரிசக்தி** – புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தி – காற்று |
| பாலின சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல் | பாலின மூலகங்கள் இல்லை |
| விவரணம் | திட்ட தொழில்நுட்ப, பொருளாதார, நிதிசார், ஆளுகை, மீள்குடியேற்றம், சுற்றுச்சூழல், மற்றும் ஏனையவை களநிலவர விடாமுயற்சி நடாத்தப்படல் போன்றன பிரதான விளைபொருட்கள் மற்றும் நடவடிக்கைகள் ஆகும்.<br><br>இந்த TA ஆனது செயல்படுத்தல் முகவரான இலங்கை மின்சார சபைக்கு (CEB) சாத்தியக்கூற்று அறிக்கை, பூர்வாங்க பொறியியல் வடிவமைப்புத் தயாரித்தல், மற்றும் களநிலவர விடாமுயற்சி தயாரித்தல் என்பனவற்றில் உதவியளிக்கும். முன்கூட்டிய ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, PPTA நிபுணத்துவ ஆலோசகர்கள் முன்மொழிப்பட்ட இலங்கை மின்சாரசபை காற்றாலை மின் உற்பத்தித் திட்டத்திற்கான பொருத்தமான விலைக் கோரல் ஆவணங்கள் மற்றும் கொள்வனவுப் பொதிகள் மற்றும் இந்தத் |

| | |
|---|---|
| | திட்டத்தில் தனியார்ததுறைப் பங்களிப்பிற்கான போட்டி விலைக் கோரல் ஆவணம் தயாரிப்பதில் உதவும். PPTA நிபுணத்துவ ஆலோசகர்கள் நாட்டில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களை மேலும் மேம்படுத்துவதில் தனியார்த்துறையை ஈடுபடுத்துவது தொடர்பாக வரைபடம் மற்றும் தெரிவுகளைத் தயாரிப்பர். |
| திட்டத்தின் காரண விளக்கமும் நாடு/ பிராந்திய மூலோபயத்திற்கான தொடர்பும் | இலங்கை அரசாங்கத்தின் துறைசார் அபிவிருத்திக் கட்டமைப்பு, எரிசக்தி வளங்களின் நிலையான அபிவிருத்தி, முழு மக்களுக்குமான குறைந்த செலவிலான எரிசக்திச் சேவைகளின் பயன்பாட்டிற்கான அணுகல் மற்றும் அத்தகைய சேவைகளின் நம்பகமான விநியோகத்தை இயலச்செய்தல் ஆகிய நோக்கங்களைக் கொண்டுள்ளது. மின்சாரத்திற்கான அணுகலை அதிகரிப்பது மற்றும் வளர்ச்சி வாய்ப்புகளுக்கான அணுகலை விரிவுபடுத்தி, ஏற்றுக்கொள்ளக் கூடிய நம்பகத்தன்மையுடன் போதுமான அளவு குறைந்த செலவிலான மின்சாரத்திற்கான வளர்ந்து வரும் தேவையை ஈடுசெய்யும் இலக்கை அடைவதற்கும், எரிசக்தி வளங்களின் நீண்டகால பேண்தகமை மற்றும் எரிசக்திப் பாதுகாப்பினை அடைவதற்கும், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்களின், குறிப்பாக இலங்கையின் எரிசக்திக் கலவையில் காற்றாலை மின் உற்பத்தியின் பங்கினை உயர்த்துவதன் ஊடாக தொகுதியின் வழங்கற் திறனை அதிகரிப்பதற்கு அரசாங்கம் திட்டமிடுகின்றது. இந்தத் திட்டங்களுக்கு ஆதரவாக முதலீட்டுத் தேவைகளைக் கவனிப்பதற்கு, ஆசிய அபிவிருத்தி வங்கியின் பரிசீலனைக்காக ஒரு பொருத்தமான முதலீட்டுத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு ஒரு திட்ட ஆயத்தத் தொழில்நுட்ப உதவி தேவையாக உள்ளது. |
| தாக்கம் | |

**திட்ட விளைவு**

| | |
|---|---|
| விளைவின் விவரணம் | |
| விளைவை நோக்கிய முன்னேற்றம் | |

**அமுலாக்கலின் முன்னேற்றம்**

| | |
|---|---|
| திட்ட விளைபொருட்கள் பற்றிய விவரணம் | |
| அமுலாக்க முன்னேற்றத்தின் நிலை (விளைபொருட்கள், நடவடிக்கைகள், மற்றும் பிரச்சினைகள்) | |
| பூகோளம்சார் அமைவிடம் | |

**சுற்றுச்சூழல் மற்றும் சமுதாயம் சார்ந்த பார்வைகளின் சுருக்கம்**

| | |
|---|---|
| சுற்றுச்சூழல்சார்ந்த பார்வைகள் | |
| தன்னிச்சையற்ற மீள்குடியேற்றம் | |
| சுதேச மக்கள் | |

**பங்குதாரர் தொடர்பாடல், பங்குபற்றல், மற்றும் ஆலோசனை**

| | |
|---|---|
| திட்ட வடிவமைப்பின் போது | |
| திட்ட அமுலாக்கத்தின் போது | |

**வியாபார வாய்ப்புக்கள்**

| | |
|---|---|
| ஆலோசனைச் சேவைகள் | நிபுணத்துவ ஆலோசகர்கள், ஆலோசகர்களின் பயன்பாடு தொடர்பான வழிகாட்டிகளைப் பின்பற்றி ஆட்சேர்க்கப்படுவர் (2013, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு) |
| கொள்வனவு | உபரணக் கொள்வனவு ஆசிய அபிவிருத்தி வங்கியின் கொள்வனவு வழிகாட்டிகளைப் பின்பற்றி மேற்கொள்ளப்படும் (2015, காலத்திற்குக் காலம் திருத்தப்பட்டவாறு). |

**பொறுப்பான பணியாளர் குழாம்**

| | |
|---|---|
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர் | முக்தோர் காமுக்ஹாநொவ் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கித் திணைக்களம் | தெற்கு ஆசியத் திணைக்களம் |
| பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு | எரிசக்திப் பிரிவு, தெற்கு ஆசியப் பிராந்தியத் திணைக்களம் |
| நிறைவேற்று முகவர்கள் | **மின்வலு மற்றும் மீள்புத்தாக்க சக்தி அமைச்சு**<br>72, ஆனந்த குமாரசுவாமி மாவத்தை<br>கொழும்பு – 01, இலங்கை |

**கால அட்டவணை**

| | |
|---|---|
| எண்ணக்கரு அனுமதி | - |
| உண்மை அறிதல் | - |
| MRM | - |
| ஒப்புதல் | 18 மார்ச் 2016 |
| கடந்த மீளாய்வுப் பணி | - |
| கடந்த திட்டத் தகவல் தாள் (PDS) புதுப்பிப்பு | 23 மார்ச் 2016 |

தொழில்நுட்ப உதவி TA 9085-SRI

**இலக்குக் கட்டங்கள்**

| **ஒப்புதல்** | **ஒப்பமிடற் திகதி** | **நடைமுறைப்படுத்தற் திகதி** | **நிறைவு** | | |
|---|---|---|---|---|---|
| | | | **மூலம்** | **திருத்தப்பட்டது** | **உள்ளபடியானது** |
| 18 மார்ச் 2016 | - | - | 31 ஜூலை 2017 | - | - |

**நிதியிடற் திட்டம்/ தொழில்நுட்ப உதவிப் பயன்பாடு** / **திரட்டிய கடன் கொடுப்பனவுகள்**

| ADB | இணை நிதியிடல் | சரிநிரப்புக்கூறு | | | | மொத்தம் | திகதி | தொகை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | அரசு | பயனாளிகள் | திட்ட அநுசரணையாளர் | ஏனையோர் | | | |
| 0.00 | 2,000,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 2,000,000.00 | 18 மார்ச் 2016 | 0.00 |

திட்டத் தரவுத் தாள்கள் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கமான தகவலைக் கொண்டிருக்கின்றன: ஏனெனில், PDS ஆனது ஒரு செயல்நிலையிலுள்ள வேலையாக இருப்பதனால், சில தகவல் இதன் முதற் பதிப்பில் உள்ளடக்கப்படாதிருக்கலாம் ஆனால் அவை கிடைக்கும் போது சேர்க்கப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதாகவும் குறிப்பானதாகவும் உள்ளது.

ADB இந்தத் தகவல் தரவுத் தாளில் உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவலை அதன் பயனர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு வளமாக மட்டும் வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி உயர் தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே நேரத்தில், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார உத்தரவாத வரையறைகள் இல்லாமை உட்பட, எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பொருந்துமாறு உள்ளபடி வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பாக, அவ்வாறான எந்தத் தகவலினதும் துல்லியம் மற்றும் பூரணத்துவம் பற்றி எந்தவித உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதிததுவங்களையோ மேற்கொள்ளவில்லை.